# மேட்டுப்பாளையம் நகராட்சி

06.02.2019ம் தேதி புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1. | இந்நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள நிறுவனங்கள் மற்றும் கடைகளை கள ஆய்வு மேற்கொண்டதில் நிறுவனங்கள் மற்றும் கடைகளின் தொழில் வரியானது இருமுறை பதியப்பட்டு கேட்பு எழுப்பப்பட்டுள்ளதாகவும் , மேலும் சில கடைகள் பூட்டப்பட்ட நிலையிலும், இடிக்கப்பட்ட நிலையில் உள்ளதாகவும் வருவாய் ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளனர். எனவே, தொழில்வரி நிலுவை கேட்பு தொகை ரூ. 3,57,956/– நீக்கம் செய்யவும் நிலுவை மற்றும் நடப்புத் தொகை பின்னர் தள்ளுபடி செய்யவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** தனி அலுவலர் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.2367/2015/அ2<br>**தீர்மானம் எண் :** 196<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 2. | தினகரன் தொழில் மலரில் நகராட்சியின் சாதனைகளை விளம்பரம் செய்யப்பட்டதற்கு வித்தியாச நிலுவை தொகை ரூ. 953/– ஐ (KAL Publications) LTD நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.3372/18/இ1<br>**தீர்மானம் எண் :** 197<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.8ல் மகாஜன பள்ளி பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிய ஆணையாளர் கூடுதல் குடியிருப்பு கட்டிடத்தில் கூடுதல் அறைகள் கட்டும் பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீடு தயார்செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணியினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 198<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 4. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குச் சொந்தமான சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்கம்பியாளர் குடியிருப்பின் மேற்கூரை மற்றும் தரைத்தளம் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி குடியிருப்பை மராமத்து பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 199<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |

| | |
|---|---|
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 23 காட்டூரிலிருந்து மகாதேவபுரம் வரை உள்ள சாலையில் கழிவுநீர் போக வழியில்லாமல் தேங்கி உள்ளது. இதனால் அங்கு கொசுக்கள் அதிகமாகி பொதுமக்களுக்கு பாதிக்கும் நிலையில் உள்ளது. ஆதலால் மேற்படி இடத்தில் கழிவுநீர் கால்வாய் கட்ட ரூ. 2.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 200<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |

# மேட்டுப்பாளையம் நகராட்சி

28.02.2019ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை. நாள் 30.04.1997ன்படி தேவைப்படும் துப்புரவுப் பணியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை 283 ஆகும்.தற்போது பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கை 108 ஆகும். எனவே மீதமுள்ள 175 துப்புரவுப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க வேண்டியுள்ளது. இருப்பினும் நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ள 151 துப்புரவுப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதியினை பெற்று தனியார் வசம் ஒப்படைக்க வேண்டியுள்ளது. எனவே அடுத்து வரும் மூன்றாண்டுகளுக்கு தனியார் மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கொள்கை ரீதியான அனுமதியினை (Principle Clearance) பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.494/2019/எச்1<br>**தீர்மானம் எண் :** 201<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 2. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் டெங்கு மற்றும் சிக்கன்குனியா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க போர்கால அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதில் ஒரு பகுதியாக நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள வீடுகளில் Indoor மற்றும் Outdoor fogging செய்யப்பட்டு வருகிறது. எனவே இதற்குத் தேவையான நோய்தடுப்பு மருந்து Pyethrum 2% Extract 200 லிட்டர் வாங்க ஆகும் தோரய செலவினம் ரூ. 2.60 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இம் மருந்தினை தமிழ்நாடு அரசு மருத்துவக் கழகம், சென்னை (TNMSC) அவர்களின் அங்கீகாரம் பெற்ற திருவாளர்கள் அருணை எண்டர்பிரைசஸ், சென்னை அவர்களிடமிருந்து நேரடியாக வாங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.607/2019/எச்1<br>**தீர்மானம் எண் :** 202<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 3. | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40–3711 தகுதி சான்றிதழ் பெற வேண்டி பழுது பணிகள் சரி செய்யும் பணிக்கு கடந்த 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br>(அட்டவணை கீழே) |

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர், ஆர்.சி.சேகர் இஞ்ஜினியரிங் & ஹைறடுராலிக்ஸ்., ஈரோடு. | 21,500/– |
| 2. | திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | 19,600/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.157/2019/எச்1
**தீர்மானம் எண் :** 203
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

| | |
|---|---|
| 4. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு பி பிளாக் 55 நகரளவு எண்.5/2ல் அமையும் 07.29 ஏக்கர் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா குடிநீர் வசதிக்காக குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன.தெருவிளக்கு அமைக்க மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ. 6,45,000/– 20.02.2019ல் செலுத்தப்பட்டுள்ளது.<br>நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளபடியால் நகராட்சிக்கு தானமாக ஏற்கச் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>நகராட்சிக்கு தானமாக ஏற்கும் சாலைகளின் எண்ணிக்கை 10 மற்றும் பூங்கா 2 ஆக மொத்தம் 10500 ச.மீ அளவுள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை நகராட்சிக்கு தானமாக பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.2603/2011/எச்1<br>**தீர்மானம் எண் :** 204<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியில் 33 வார்டு பகுதியில் வசித்து வரும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளிடம் கூடுதல் விவரங்கள் சேகரித்தல் புதியதாக விண்ணப்பங்கள் கொடுத்துள்ளவர்கள் குறித்து ஆய்வு செய்து விவரங்களை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ள ஏதுவான கணிணி இயந்திரங்கள், பணியாளர்கள் அதிகளவில் நகராட்சியில் இல்லாததால் தனியார் நிறுவனங்கள் மூலம் விரைவாகப் பணிகள் மேற்கொள்ளவும் , படிவங்கள் நகலெடுக்கவும் வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட பணியினை தனியார் நிறுவனங்கள் மூலம் (Outsourcing) மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.541/2019/எப்1<br>**தீர்மானம் எண் :** 205<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 6. | பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் வாகனம் தா 40–4100ற்கு FC தகுதி சான்றிதழ் வேண்டியுள்ளதால் இவ்வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தும் FC தகுதி சான்றிதழ் பெற்று வழங்குவதற்கும் ஆகும். உத்தேச செலவினம் ரூ.1,25,000/–ற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு சீரான முறையில் குடிர் விநியோகம் செய்ய வாகனம் தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி உத்தேச செலவினத்திற்கும் இவ்வாகனத்திளுள்ள பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று பெற்றுத்தரவும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது முன் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரவும் பணி உத்தரவு வழங்கவும் தொகை வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.241/2019/இ1<br>**தீர்மானம் எண் :** 206<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |

7. மேட்டுப்பாளையம் நகராட்சியில் ஆணையர் அவர்களது பயன்பாட்டிற்கு புதிய Scorpio (S11 2wd 14 OBHP BS4) ஈப்பினை ரூ. 14.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியில் வாங்கி கொள்ள தனி அலுவலர், ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக சென்னை அவர்களது அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண்.3322/2018/இ1
**தீர்மானம் எண் :** 207
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

8. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40பி–1320 தகுதி சான்றிதழ் பெற வேண்டி பழுது பணிகள் சரி செய்யும் பணிக்கு கடந்த 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | 78,150/– |
| 2 | திருவாளர், ஆர்.சி.சேகர் இஞ்ஜினியரிங் & ஹைட்ராலிக்ஸ்., ஈரோடு. | 85,500/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.199/2019/எச்1
**தீர்மானம் எண் :** 208
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

9. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40எம்–9694 தகுதி சான்றிதழ் பெற வேண்டி பழுது பணிகள் சரி செய்யும் பணிக்கு கடந்த 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | 58,850/– |
| 2 | திருவாளர், ஆர்.சி.சேகர் இஞ்ஜினியரிங் & ஹைட்ராலிக்ஸ்., ஈரோடு. | 65,500/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.507/2019/எச்1
**தீர்மானம் எண் :** 209
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

10. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40எம்–9703 தகுதி சான்றிதழ் பெற வேண்டி பழுது பணிகள் சரி செய்யும் பணிக்கு கடந்த 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | 58,050/– |
| 2 | திருவாளர், ஆர்.சி.சேகர் இஞ்ஜினியரிங் & ஹைறடுராலிக்ஸ்., ஈரோடு. | 61,800/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.508/2019/எச்1

**தீர்மானம் எண் :** 210

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

11. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40–0986 தகுதி சான்றிதழ் பெற வேண்டி பழுது பணிகள் சரி செய்யும் பணிக்கு கடந்த 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர், ஆர்.சி.சேகர் இஞ்ஜினியரிங் & ஹைறடுராலிக்ஸ்., ஈரோடு. | 29,100/– |
| 2. | திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு | 24,100/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.154/2019/எச்1

**தீர்மானம் எண் :** 211

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

12. இந் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40–3711க்கு தேவையான புதிய டயர்கள் மற்றும் பேட்டரி வாங்கும் பணிக்கு கடந்த 22.2.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தத் தொகை ரூ.** |
|---|---|---|
| 1. | திருவாளர் ரமேஷ் ஏஜென்சீஸ்., மேட்டுப்பாளையம். | 62,400/ |
| 2. | திருவாளர் ரிஷப் எண்டர்பிரைசஸ், மேட்டுப்பாளையம். | 62,950/ |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ரமேஷ் ஏஜென்சீஸ், மேட்டுப்பாளையம், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.4411/2018/எச்1

**தீர்மானம் எண் :** 212

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

13. இந் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் டி.என்.40பி–1497 தகுதி சான்றிதழ் பெற வேண்டி பழுது பணிகள் சரி செய்யும் பணிக்கு கடந்த 22.2.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர் ஆர்.சி.சேகர் இஞ்ஜினியரிங் & ஹைறடுராலிக்ஸ்., ஈரோடு. | 1,23,200/ |
| 2. | திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு. | 1,10,200/ |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.33/2018/எச்1

**தீர்மானம் எண் :** 213

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

14. மேட்டுப்பாளையம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் 2018–19ன் கீழ் 8வது மாநில குழு மூலம் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.1191/2019/P3 நாள்.21.01.2019ல் 2.00கனமீட்டர் கொள்ளளவு கொண்ட தானியங்கி டிப்பர் வாகனம் 4 எண்ணிக்கைகள் வாங்குதல் பணி மதிப்பீடு 22.40 இலட்சம் பணிக்கு 15.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விலைப்புள்ளி 22.02.2019 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | 2 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட டிப்பர் வாகனம் 5 எண்ணிக்கைகள் வாங்குதல் பணி | ரூ.22.40 | திருவாளர். லஷ்மி ஆட்டோ டிசல் வொர்கஸ், சேலம் | 0.32% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். ஏ.பி.டி இன்டஸ்டிரீஸ் லிமிடெட் கோவை | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.32% மதிப்பீட்டிற்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.லஷ்மி ஆட்டோ டிசல் வொர்க்ஸ் ( Lakshmi Auto Disel Works Mettur) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண் :** : 214

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

| | |
|---|---|
| 15. | மேட்டுப்பாளையம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் 2018–19ன் 8வது மாநில குழு மூலம் பணிகள் மேற்கொள்ள மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்கள் 15 எண்ணிக்கைகள் வாங்குதல் பணிக்கு மதிப்பீடு 27.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்.1191/2019/P3 நாள்.21.01.2019 ல் பெறப்பெற்று மேற்கண்ட பணிக்கு 15.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 22.02.2019 அன்று விலைப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்கள்15 எண்ணிக்கைகள் வாங்குதல் பணி | ரூ. 27.00 | திருவாளர்.அருண் இந்தியா மோட்டார்ஸ் சேலம் | 2.78% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். பிரியம் இண்டஸ்டிரியல் எக்யூப்மெண்ட்ஸ் தாராபுரம் | 11.03% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.ஷார்ப் சிஸ்டம்ஸ், கோவை | 11.89% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் 11.89/– மதிப்பீட்டிற்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். Sharp System Coimbatore (ஷார்ப் சிஸ்டம்ஸ்) கோவை அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண் :** : 215

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

| | |
|---|---|
| 16. | மேட்டுப்பாளையம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் 2018–19ல் 8வது மாநில குழு மூலம் பணிகள் மேற்கொள்வதற்கு 19.02.2018 அன்று ரூ. 215.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து ந.க.எண்.1191/2019/P3 நாள்.21.01.2019 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 15.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 25.02.2019 அன்று காலை 11.30 மணிக்கு பிரித்து கூர்ந்தாய்வு செய்ததில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டது. |

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை நவீன முறையில் (Biomining) சுத்தம் செய்து உரக்கிடங்கினை புதுப்பிக்கும் பணி செய்தல் | ரூ. 215.00 இலட்சம் | திருவாளர். ஸ்ரீபொம்பு இன்டஸ்ட்ரிஸ் கோவை | 4.85% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர்.கிரீன் எக்யூப்மெண்ட்ஸ் கோவை | 5.16% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | .3R மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட் நியூடெல்லி | 26.76% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டிற்கு அதிகமாக 4.85% ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். ஸ்ரீபொம்பு இன்டஸ்ட்ரிஸ் கோவை அவர்களுக்கு மதிப்பீட்டிற்கும் கூடுதலாக உள்ளதால் அன்னார்க்கு 25.02.2019 அன்றே விலை குறைப்பு செய்து தரக்கோரி கடிதம் அனுப்பப்பட்டது. எனவே அந்த ஒப்பந்ததாரர் தனது 27.02.2019ம் தேதிய கடிதத்தில் இப்பணிக்கான டீசல் மற்றும் மூலப்பொருட்களின் விலை, வாகன வாடகை செலவு மற்றும் ஆட்கூலி உயர்வு ஆகியவைகளின் விலை ஏற்றத்தின் காரணமாக ஒப்பந்தப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள தொகையினை 4.82%க்கு (ரூ.669.80/m3) தொகைக்கு குறைத்து கொடுத்துள்ளார். மேலும் தொகையினை குறைப்பு செய்ய இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே இவ்வொப்பந்தப்புள்ளியினை மன்ற அனுமதிக்குட்பட்டு மதிப்பீட்டிற்கு கூடுதலாக 5% த்திற்கு மிகாமல் இருப்பதால் பொது மக்களின் சுகாதார நலன்பேணும் திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அரசின் திட்டப்பணியின் அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ள திருவாளர். ஸ்ரீபொம்பு இன்டஸ்ட்ரிஸ் கோவை அவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள அதிகபட்ச தொகையான ரூ. 2,37,689/—யை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** இப்பணியின் அவசர அவசியம் கருதி மேற்கொண்ட ஒப்பந்ததாரர்க்கு LOA வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் :** 216

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

17. மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை, நாள் 30.4.1997ன்படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 2902/பி3/2016 நாள் 24.2.2016 மற்றும் 18.7.2016ன்படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 1.7.2019 வரை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண்.எச்1/6219/2016 நாள் 21.1.2019ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் சில கூடுதல் விபரங்களுடன் மீண்டும் இவ்வலுவலக ந.க.எண்.எச்1/494/2019 நாள் 28.2.2019ல் மீண்டும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது நாடாளுமன்ற தேர்தல் நடக்க இருப்பதாலும், நகராட்சி நிர்வாக

| | |
|---|---|
| | ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், சுகாதார பணிகள் பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர் எஸ்.எஸ்.இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 1.3.2019 முதல் 31.7.2019 வரை தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.494/2019/எச்1<br>**தீர்மானம் எண் :** 217<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 18. | இந்நகராட்சியின் 2018–2019ம் ஆண்டுக்கான திருத்திய திட்ட மதிப்பீடு மற்றும் 2019–2020ம் ஆண்டுக்கான உத்தேச திட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** தனி அலுவலர் பதிவு செய்யலாம்<br>ந.க.எண்.6262/2012/பி1<br>**தீர்மானம் எண் :** 218<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 19. | அரசு ஆணைஎண்.222 நிதி(ஊதியம்) துறை நாள்.01.07.2013ன்படி இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் சிறப்பாகப் பணியாற்றி வரும் 25 வருடங்கள் பணிக்காலத்தை முடித்த கீழ்க்காணும் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை ரூ. 2000/– பாராட்டுச் சான்றிதழும் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | கோட்டம் எண் |
|---|---|---|
| 1 | திரு. ஆறுமுகம் / கிருஷ்ணன் துப்புரவுப் பணியாளர் | II |
| 2 | திருமதி. லிங்கம்மாள் / குப்புசாமி துப்புரவுப் பணியாளர் | II |
| 3 | திரு. வெள்ளிங்கிரி / கந்தன் துப்புரவுப் பணியாளர் | III |
| 4 | திருமதி. ஜெயமணி/ கந்தன் துப்புரவுப் பணியாளர் | IV |
| 5 | திருமதி. பார்வதி / கிட்டான் துப்புரவுப் பணியாளர் | IV |
| 6 | திருமதி. ஜானகி / ராமசாமி துப்புரவுப் பணியாளர் | IV |
| 7 | திருமதி.செல்லம்மாள் / கந்தன் துப்புரவுப் பணியாளர் | IV |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.572/2019/எச்2

**தீர்மானம் எண் :** 219

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

20. மேட்டுப்பாளையம் நகராட்சி கல்விநிதி 2018–19 மற்றும் பொதுநிதி 2018–19ன் கீழ்க்கண்டவாறு பணிகளுக்கு 28.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு %. |
|---|---|---|---|---|
| 1 | **<u>ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் 2018–2019</u>** வார்டுஎண்.33 பாரி கம்பெனி அங்கன்வாடி பள்ளியில் மராமத்து பணிகள் செய்தல் | ரூ. 3.90/– இலட்சம் | திருவாளர். ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.06% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீஅஸ்க் சுஸ்மா இன்ப்ராஸ்டரக்சர்ஸ் | 1.91% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | **<u>கல்வி நிதி 2018–19</u>** வார்டு எண். 17, வ.உ.சி. துவக்கப்பள்ளி யில் சிறிய நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் | ரூ. 1.00/– இலட்சம் | திரு. S.S.கோபாலகிருஷ்ணன் | 0.04% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.G.K.S. சேதுபதி | 1.82% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | வார்டு எண்.32 மணிநகர் உயர்நிலைப்பள்ளியில் பின்புறம் உள்ள நுழைவாயிலில் கேட் மற்றும் சுற்று சுவரில் கம்பி லேவி அமைத்தல் | ரூ. 3.00/– இலட்சம் | திரு. M. வேலுசாமி | 3.82% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.G.K.S. சேதுபதி | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| 4 | **<u>பொதுநிதி 2018–19</u>** வார்டு எண் 15, பழைய சந்தை பேட்டை சாலையில் சிறிய நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் | ரூ. 1.50/– இலட்சம் | திரு. S.S.கோபாலகிருஷ்ணன் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.G.K.S. சேதுபதி | 0.45% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5 | வார்டு எண் 4, சங்கர் நகர் பகுதியில் சிறிய நுண்ணுயிரி உரமாக்கல் மையம் அமைத்தல் | ரூ. 1.50/– இலட்சம் | திரு. S.S.கோபாலகிருஷ்ணன் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.G.K.S. சேதுபதி | 0.45% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 6 | வார்டு எண். 27 ஜவஹர்லால் பேருந்து நிலையவளாகத்தில் உள்ள அம்மா உணவகத்தில் மராமத்து பணியில் செய்தல் | ரூ. 1.00/– இலட்சம் | திரு. M. வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. K. வேலுசாமி | 1.97% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண் :** 220

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

| | |
|---|---|
| 21 | தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.26458/2016/தி1 நாள் 29.5.2017 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1897/2017/பி3 நாள் 16.10.2017ன்படி மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு 8 பரப்புரையாளர்கள் மற்றும் 2 மேற்பார்வையாளர்களும் பொது மக்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு நியமித்து உத்திரவிடப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.<br>மேற்கண்ட பணியாளர்களின் பணிக்காலம் 31.8.2018 உடன் முடிவடைவதால் இவர்களின் பணிக்காலத்தினை 31.8.2019 வரை நீட்டிப்பு செய்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.பி1/26458/2016 நாள் 13.11.2018ல் உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26458–1/2016/தி1 நாள் 31.7.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மேற்கண்ட நிறுவன ஊழியர்களுக்கு ஊதியத் தொகையினை தங்களது பொது நிதியிலிருந்து வழங்கிடவும், அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கான ஊதியத்தினை பொது நிதியில் இருந்து வழங்கிடவும், அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் பொது நிதிக்கு மாற்றம் செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**தீர்மானம் எண் :** 221<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 22. | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையில் சாலை விரிவாக்கம் பணி நடைபெறுவதால் சிறுபாலங்கள் இடையூறாக இருக்கும் குடிநீர் பைப்களை இடமாற்றம் செய்யவும், சாலைப்பணி நடைபெறும் போது அவ்வப்போது ஏற்படும் பம்பிங்மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்கள் உடைப்பு சரி செய்யவும், பொதுக்கழிப்பிடம் மற்றுமூ பொதுக் குழாய்கள் மராமத்து செய்யவும், அதற்குத் தேவையான உதிரிச்சாமன்கள் விநியோகம் செய்யவும் 24.01.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 08.02.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | G.K.S. சேதுபதி<br>கிட்டாம்பாளையம் | ரூ. 2,00,000/– | ரூ. 2,00,895/– |
| 2 | M.வேலுச்சாமி<br>6 EB காலனி,<br>மேட்டுப்பாளையம் | ரூ. 2,00,000/– | ரூ. 1,96,032/– |

**அலுவலகக் குறிப்பு :**

மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதைவிட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளரின் எம். வேலுச்சாமி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று பணி உத்தரவு வழங்கலாம்.

ந.க.எண். 4060/2018/இ1

**தீர்மானம் எண் :** 222

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

23. மேட்டுப்பாளையம் நகராட்சி கனிணிப்பிரிவில் உள்ள கனிணிகள் பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர், நெட் ஒர்க் கேபிள்கள் ஆகியவை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள 18.01.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 06.02.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் வருமாறு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி விகிதம் ரூ |
|---|---|---|---|
| 1 | *M/s* சிஸ்கான் சிஸ்டம்ஸ் 28/1, சாகரி இல்லம், ஜீவா நகர், கோயமுத்தூர் | ரூ.2,90,000/– | 2,89,190.40 |
| 2. | *M/s* .சாகர் எலக்ட்ரானிக்ஸ் , பொள்ளாச்சி | ரூ.2,90,000/– | 3,14,287 |

**அலுவலகக் குறிப்பு :** மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள *M/s* சிஸ்கான் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க கணினி அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கலாம்.

**தீர்மானம் எண் :** 223

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

24. மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண்.25, க.எண்.28F 1B(l), கெண்டையூர் ரோட்டில் அமைந்துள்ள (Sura Educational Trust) கோர்வெல் மெட்ரிகுலேசன் பள்ளி கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிக்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 83(i)(சி)ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரைஆண்டிலிருந்து கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிப்பது தொடர்பின் பேரில் மேற்கண்ட நிறுவனத்திற்கு சொத்துவரி விதிக்கப்பட்டு சிறப்பு அறிக்கை (Special Notice) அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்கண்ட தொகையினை வசூலிக்க நடவடிக்கை ஏதும் எடுக்ககூடாது என அந்நிறுவனத்தால் திரு. B. சிங்காரவேலு வழக்கறிஞர் மூலமாக இவ்வலுவலகத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன்பேரில் இந்நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.எம்.வி.செய்தில்குமார் அவர்கள் மூலம் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதற்கான தொகை ரூ.2500/– ஐ வழங்க நகராட்சி வழக்கறிஞர் கோரியுள்ளார். எனவே திரு. M.V.செந்தில்குமார் அவர்களுக்கு மேற்படி தொகையினை வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண்.995/2018/அ2

**தீர்மானம் எண் :** 224

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

25. மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9, 12 பகுதிகளில் உள்ள கிருஷ்ணசாமி லே அவுட், மாதையன் லே அவுட், பொன்னான் மூப்பன் சந்து மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பம்பிங் மெயினில் இன்டர்லிங் செய்ய 24.01.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 08.02.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் வருமாறு

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | G.K.S. சேதுபதி கிட்டாம்பாளையம் | ரூ. 1,50,000/– | ரூ. 1,34,070/– |
| 2 | M.வேலுச்சாமி 6 EB காலனி, மேட்டுப்பாளையம் | ரூ. 1,50,000/– | ரூ. 1,31,200.50/– |

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு :** மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் எம். வேலுசாமி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, குடிநீர் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.000248/2018/இ1<br>**தீர்மானம் எண் :** 225<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 26. | இந்நகராட்சிக்குச் சொந்தமான கடைகள் மற்றும் வணிகவளாகங்களுக்கு 01.06.2007 முதல் 30.09.2011 முடிய செலுத்தப்பட வேண்டிய நிலுவை சேவை வரித் தொகை ரூ.44,55,226/– ஐ உடன் செலுத்த மத்தியகலால் மற்றும் சுங்கவரித்துறை அலுவலகம் குன்னூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சேவைவரிக் கட்டணம் செலுத்துவது தொடர்பாக ஏற்கனவே ஆணையர் மத்தியகலால் மற்றும் சுங்கவரித்துறை சேலம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட மேல்முறையீடானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.<br>மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவினை எதிர்த்து CESTAT சென்னை அவர்களுக்கு மேல்முறையீடு செய்வது தொடர்பாக மேல்முறையீட்டு கட்டணம் கீழ்க்கண்டவாறு செலுத்த வேண்டியுள்ளது.<br>1. மேல்முறையீடு செய்ய திரு. சங்கரநாராயணன் Advocate and Consultant, கோவை அவர்களை நியமித்துக் கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>2. மேல்முறையீடு செய்வதற்கான மொத்த தொகையில் (ரூ.25,28,870) 10% கட்டணம் ரூ.2,53,000/– செலுத்தி மேல்முறையீடு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.<br>3. சேவைவரி ஆலோசகர் கட்டணம் ரூ. 10,000/– மற்றும் ரூ.500/– மேல்முறையீடு ஆகும் கட்டணம் in favour of the Assistant Register CESTAT, Chennai என்ற பெயரில் Payable at Chennai என்ற முகவரிக்கு கேட்பு வரைவோலையாக செலுத்துவதற்கும், தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசிய அவசரத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : 1. வரிசை எண். 1 முதல் 3 வரை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1033/2010/அ1<br>**தீர்மானம் எண்** : 226<br>**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 27. | மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியிலுள்ள மகாதேவபுரம் முத்தமிழ் நகர்குடியிருப்போர் நலச்சங்கம் நகராட்சிக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு எண் IA No 571/2018 OS No 268/2018ல் நகராட்சி சார்பாக வழக்கினை நடத்தி Caveat பதிவு செய்ததற்கு கட்டணம் ரூ. 25,000/–தை நகராட்சி வழக்கறிஞர் திரு. செந்தில் குமார் B.Com., BL., அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொள்வதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். |

**தீர்மானம் எண்** : 227

**தீர்மானம்** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

28. மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1.5Hp,2Hp நீர் முழ்கி மோட்டார்களின் அதிக மின்னோட்டம் காரணமாக காயில் பழுதாகியுள்ளது. மேற்படி மோட்டார்கள் சரிசெய்ய பொதுமக்கள் புகார்கள்அளித்த வண்ணம் உள்ளதால் பழுதான மோட்டார்கள் காயில் , ரீவைண்டிங் , பம்பின் பழுதுகள் , பேனல் போர்டுகள், கெப்பாசிட்டர்கள் மாற்றி இயக்க வேண்டியுள்ளது. ஆகையால் கீழ்க்கண்ட இடங்களில் பழுதான மோட்டார்கள் சரி செய்ய ஆணையரின் ஒப்புதலுக்கு.

| | | |
|---|---|---|
| 1 | சுபாஷ் காலனி | வார்டு எண்.2 |
| 2 | கோவிந்தசாமி நகர் | வார்டு எண்.31 |
| 3 | மகாதேவபுரம் கிருஷ்ணசாமி லே அவுட் | வார்டு எண்.12 |
| 4 | காமராஜ் நகர் | வார்டு எண்.24 |
| 5 | கெண்டையூர் (NCMS) | வார்டு எண் 24. |
| 6 | பாரதி நகர் | வார்டு எண்.33 |
| 7 | சிறுமுகை ரோடு | வார்டு எண்.5 |
| 8 | சந்தை கடை | வார்டு எண்.5 |
| 9 | மணிநகர் பள்ளி | வார்டு எண்.32 |
| 10 | பாரதி நகர் ஆதிதிராவிடர் காலனி | வார்டு எண்.33 |
| 11 | N.C.M.S காலனி | வார்டு எண்.25 |
| 12 | மொக்கை ஏர் கம்ப்ரஸர் பழுது அகற்றுதல் | வார்டு எண்.17 |

மேற்கண்ட இடங்கில் பழுதான மோட்டார்களை காயில் ரீவைண்டிங் செய்யவும் பம்பின் பழுதுகள் அகற்றி நீர் முழ்கி மோட்டாரை ஏற்றி இறக்கவும் , பேனல்போர்டு மாற்றவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,90,000/.க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பழுதான மோட்டார்கள் சரி செய்ய குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.4383/2018/இ1

**தீர்மானம் எண் :** 228

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

| | |
|---|---|
| 29 | மேட்டுப்பாளையம் நகாரட்சியில் பொதுநிதி 2018–19ன் கீழ் கோரப்பட்ட கீழ்க்காணும் பணிக்கு 05.02.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.27 ஜவஹர்லால் நேரு பேருந்து நிலைய வளாகத்தில் மராமத்து பணிகள் செய்தல் | 9,90,000/– | திரு. சி. நாகராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. எம். வேலுசாமி | 2.08% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டிற்கு 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள சி. நாகராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்க முன் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் :** 229

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

30. இந்நகராட்சியின் உரத்திடலில் அமைக்கப்பட்டுள்ள Bio Methanation Plant செயல்பட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையை புதுப்பிக்க இசைவாணைக் கட்டண நிலுவைத்தொகை ரூ.17800/–ஐ செலுத்தக்கோரி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், கோவை (வடக்கு) அவர்களிடமிருந்து குறிப்பாணை வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி இசைவாணையைப்புதுப்பிக்க இசைவாணைக் கட்டணம் ரூ.17,800/–ஐ உடனடியாகச் செலுத்த வேண்டியுள்ளதால் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 15ன் கீழ் மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.287/2007/எச் 2

**தீர்மானம் எண் :** 230

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

31. மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை நகராட்சி உரக்கிடங்கில் தினசரி கொட்டப்பட்டு வருகிறது. தற்போது உரக்கிடங்கில் குப்பைகள் நிரம்பி உள்ளதால் அவற்றை அகற்றி சுத்தம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் Bio Miningக்கு அனுமதி பெற்றுள்ளதால் உடனடியாக அவற்றை HITACHI வாகனம் மூலம் அகற்ற வேண்டியுள்ளதால் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.308/2019/எச்2

**தீர்மானம் எண் :** 231

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

32. மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி **2018–19**ன் கீழ் கோரப்பட்ட கீழ்க்காணும் பணிக்கு **01.02.2019** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகம் மற்றும் பொதுசுகாதார வார்டு அலுவலங்களில் பயோ மெட்ரிக் டிவைஸ் பொருத்துதல் | ரூ.2,00,000 | M/s.Future ERA | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | M/s. EYE SOFT | 2.02% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M./s.Future ERA அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பணியில் அவசரம் அவசிம் கருதி வேலை உத்தரவு வழங்குவதற்கும் முன் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் :** 232

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

33. மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 மேட்டுப்பாளையம் நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முதல் தளத்தில் கூடுதலாக வகுப்பறை கூடுதல் பணிக்கு சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம் 2018–19ன் கீழ் திட்ட இயக்குநர் அவர்கள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கோவை அவர்களின் ந.க.எண்.435/2018/B2 நாள்.21.02.2019 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண் :** 233

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

34. மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20, மேட்டுப்பாளையம் நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முதல் தளத்தில் கூடுதலாக வகுப்பறை கட்டுதல் பணிக்கு பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டம் 2018–19ன் கீழ் திட்ட இயக்குநர் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கோவை அவர்களின் ந.க.எண்.370/2017/B2 நாள்.21.02.2019 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதனை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண் :** 234

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

35. மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண் 20, வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க வளாகத்தில் உள்ள நியாய விலைக் கடைக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் கூடுதல் வசதிகள் செய்தல் பணிக்கு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் ந.க.எண்.630/2018/ B2, நாள்.01.02.2019 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்காணும் பணிக்கு 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்பபடுகிறது.

| வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | வார்டுஎண்20, மேட்டுப்பாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க வளாகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ. 3.50/– | திருவாளர். ஸ்ரீஅஸ்க் சுஸ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் | 0.24% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 1.27% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருவாளர்.ஸ்ரீ அஸ்க் சுஸ்மா இன்பராஸ்ட்ரக்சர்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண் :** 235

**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

36. மேட்டுப்பாளையம் நகராட்சி பொதுநிதி 2018–19 கல்விநிதி 2018–19ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு (12.02.2019) ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | பொது நிதி 2018–19 வார்டு எண் 23 மகாதேவபுரம் பிரதான சாலையின் கிழக்கு பகுதியில் புதியதாக சிறுபாலம் அமைத்தல் | ரூ.3.60 | திருவாளர். ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.09% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்ப்ராஸ்டரக்சர்ஸ் | 1.19% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண் 8, மகாஜன பள்ளி பின்புறம் உள்ள இடத்தில் புதியதாக ஆணையாளர் கூடுதல் குடியிருப்பு கட்டுதல் | ரூ. 9.90 | திரு. சி.நாகராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்ப்ராஸ்டரக்சர்ஸ் | 3.35% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் கட்டுப்பாட்டிலுள்ள உலர் கழிவு மையத்திற்கு மின்சார வசதி செய்தல் மற்றும் உயிரி எரிவாயுக் கூடத்திற்கு | ரூ.3.40 | திரு.சி.நாகராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.எம்.வேலுசாமி | 2.87% மதிப்பீட்டிற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | தண்ணீர் வசதி செய்தல் | | | அதிகம் |
| 4 | வார்டு எண்.4 சங்கர் நகர் பகுதியில் உள்ள பகவான் மஹாவீர் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல் | ரூ.7.50 | திருவாளர். ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.05%. மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். ஸ்ரீ அஸ்க் சுஷ்மா இன்ப்ராஸ்டரக்சர்ஸ் | 2.72% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5 | வார்டு எண்.1 அண்ணா நகர் நகரவை பள்ளியில் நவீன முறையில் கணினி வழியில் கற்பித்தல் வகுப்பறைகளுக்கு கூடுதல் வசதி செய்தல் | ரூ.5.50 | திருவாளர்.ப்யூசர் எரா | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். ஐ சாப்ட் | 2.94% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்
**தீர்மானம் எண் :** 236
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

37. மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 27ல் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள அம்மா உணவக வளாகத்தில் அடுப்பு, Steamer, Grinder முதலிய உபகரணங்களில் பழுதுகள் ஏற்படுவதால் முறையாக மற்றும் உரிய நேரத்தில் உணவுகள் தயாரிப்பது மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் அம்மா உணவகத்தில் சில மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்
**தீர்மானம் எண் :** 237
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

38. மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 32ல் உள்ள மணிநகர் பகுதியில் மணிநகர் நகராட்சி பள்ளியில் பின்புறம் நுழைவாயில் அமைப்பதற்கு மேலும் நகராட்சி பள்ளியில் இரவு நேரங்களில் பள்ளியின் பாதுகாப்பு கருதியும் பள்ளியின் சுற்றுசுவரை உயர்த்தி கம்பி வேலி அமைப்பதற்கு ரூ3.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இப்பணியினை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்
**தீர்மானம் எண் :** 238
**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது

| | |
|---|---|
| 39. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.20ல் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான பெண்கள் மேல்நிலை பள்ளியில் அதிக அளவில் குழந்தைகள் பயிலுவதால் தற்பொழுது ஆங்கில வழி கல்விமுறையும் சேர்ந்து பயிற்றுவிப்பதால் வகுப்பறைகள் கூடுதலாக தேவைப்படுகிறது என்று தலைமை ஆசிரியர் அவர்களின் கடிதத்தின் மூலம் தெரிவித்ததையடுத்து கூடுதலாக ஒரு வகுப்பறை முதல் தளத்தில் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 8.50 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**தீர்மானம் எண் :** 239<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 40. | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மணிநகர், கே.கே.நகர் மற்றும் பங்களாமேடு மேல்நிலைத் தொட்டிகளில் உள்ள பகிர்மானக் குழாய்களில் பழுதான வால்வுகள் மற்றும் தினசரி குடிநீர் வழங்கும் பொருட்டு ஆங்காங்கே இன்டர்லிங் செய்யவும். அதற்குத் தேவையான பைப்புகள், வால்வுகள்,CID ஜாய்ண்டுகள் மற்றும் தேவையான உதிரிச்சாமன்கள் வாங்கி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு குடிநீா தினசரி வழங்கவும், ஆகும் செலவினத்திற்கு குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1157/2018/இ1<br>**தீர்மானம் எண் :** 240<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |
| 41. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இறந்து போகும் அனாதைப்பிரேதங்களை காவல்நிலையம் மூலம் வரப்படும் விண்ணப்பத்தின் அடிப்படையில் அனாதைப்பிணங்களை எடுத்து கோவிந்தன்பிள்ளை மயானத்தில் அடக்கம் செய்துவரும் திரு. முருகேசன் என்பவருக்கு 01.01.2018 முதல் 31.11.2019 வரை 22 அனாதைப்பிணங்களை அடக்கம் செய்ததற்கான தொகை ரூ.200 வீதம் 22க்கு ரூ.4400/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி அளிக்கலாம்<br>ந.க.எண்.2838/2018/எச்2<br>**தீர்மானம் எண் :** 241<br>**தீர்மானம் :** அலுவலகக் குறிப்பு ஏற்கப்பட்டது |